★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 1உ புதன் (17—10—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 2உ வியாழன் (18—10—56) [இதழ் 110

ஆசிரியர் சம்பளத்தை உயர்த்த சர்க்கார் ஆசைப்படுகிறதாம்!

★

மங்களூர், அக். 16—

" ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை உயர்த்த வேண்டுமென நாங்கள் விழைகிறோம். அதுகுறித்து சீக்கிரமே சர்க்கார் அறிக்கை வெளியிடும்" என்று மந்திரி சுப்பிரமணியம் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய நலன் என்ற பெயரில் மைசூருக்குக் கேடு

மக்கள் நலனுக்குக் கல்லறை

ஆங்கில துரைமார்களிடம் மோகம்

'டில்லி முடிவு எதுவானாலும் அதை வாய்மூடி ஏற்கத்தான் வேண்டுமோ?'

'இச்சபைக்கு எவ்விதப்பொறுப்பும் இல்லையே'

தங்கச் சுரங்க தேசியமய மசோதா விவாதத்தில் வெளியான தகவல்

"கோலார் தங்கவயல் தேசியமயமாக்கப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை மக்களுக்குச் சாதகமாக நிர்ணயிப்பதை விடுத்து, ஏற்கனவே மைசூர் அரசாங்கம் வரையறுத்திருந்தத் தொகையை சுரங்கக் கம்பெனிகளுக்குச் சாதகமாக இந்தியப் பேரரசு உயர்த்தி இருக்கிறது.

"டெல்லியில் உள்ள அதிகாரிகள் எதைக் கூறினாலும் நாம் வாய்மூடி அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், இந்தச் சட்டசபைக்கு எவ்விதப் பொறுப்பும் இருப்பதாகத் தெரியவில்லை."

இக்கருத்துக்களை, கோலார் தங்கவயலை தேசிய உடைமையாக்கும் மசோதாவை மைசூர் சட்டசபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட பொழுது, முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா குறிப்பிட்டுள்ளார்.

மசோதாவைப் பிரரேபித்து உள்நாட்டு அமைச்சர், நஷ்ட ஈட்டுத் தொகை பற்றி இந்தியப் பேரரசிற்கும் மைசூர் அரசாங்கத்திற்கும் நடைபெற்ற விவாதங்களின் முழு விவரத்தைக் குறிப்பிடும் பொழுது கூறியதாவது:—

"கோலார் தங்கவயலுக்குத் தரப்படவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை 878 இலட்சம் ரூபாயாக மைசூர் அரசாங்கம் முதல் முதலாக நிர்ணயம் செய்திருந்தது.

"இந்த அரசாங்கக் கருத்துக் கொண்ட கடிதம் ஒன்றை முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா, இந்தியப் பேரரசின் உடன்பாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்ட தேசிய மயமாக்கும் மசோதாவுடன் அனுப்பி இருந்தார்.

"மைசூர் அரசாங்கம் தர நினைத்திருந்த நஷ்ட ஈட்டுத் தொகையின் நியாயத்தில், மத்திய ஆட்சியின் இயற்கைச் சாதனங்களின் அமைச்சர் ஐயப்பட்டார். அதன் பலனாக, மைசூர் அரசாங்கச் சார்பில் உள்நாட்டமைச்சர் சித்த வீரப்பாவிடமும், கல்வி அமைச்சர் இராமச்சந்திர ராவிடமும், மத்திய அமைச்சர் கலந்துபேசி உண்மை நிலையை விளக்கினர்.

"பற்பல பிரிட்டிஷ் தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் இருந்து வருகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையை நோக்குமிடத்து, அதில் இடம் பெற்றுள்ள ஏற்பாடுகள் அனைத்தும் வெற்றி பெறுவது பெரிதும் பிறநாட்டு மூலதனத்தைப் பொறுத்து இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

" தங்கவயலைத் தேசியமயமாக்கும் பிரச்சினைக்கு வெளிநாட்டுப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது; உலக பாங்கியும்கூட இதுபற்றிக் குறைபட்டுக்கொண்டது. எனவே, இந்தத் தொடர்பில், இங்கு போடப்படும் மூலதனத்திற்குத் தகுந்த பிரதிபலன் கிடைக்குமென்ற நம்பிக்கையை வெளிநாட்டினருக்கு நாம் ஊட்டியாக வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

" ரூ. 878 இலட்சத்திற்கு மேல் நஷ்டஈடு தரமுடியாது எனக் கூற மைசூர் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு.

"இந்தியாவின் முழு அபிவிருத்தியில் இந்தியப் பேரரசிற்குள்ள முழுப் பொறுப்பையும், அவ்வகையில வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள் எதற்கும் பாதகமேற்படவில்லை என்பதில் திருப்தி கொள்ளவேண்டிய இந்திய அரசாங்கத்திற்குள்ள கடமையையும் முதன்மையாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

"தங்கச் சுரங்கங்களைத் தேசியமயமாக்கும் முயற்சியை, வெளிநாட்டுச் சந்தை எவ்வாறு கருதுகிறது என்பதின் முழு உருவத்தை மைசூர் அரசாங்கத்திற்கு, மத்திய அரசாங்கம் உணர்த்தியது.

"தங்கச் சுரங்கக் கம்பெனிகள் நஷ்டஈட்டுத் தொகையாக ரூ. 14 கோடி கேட்டது. முடிவாக அத்தொகையை ரூ. 6 கோடி அளவுக்குக் குறைத்து வற்புறுத்தியது.

"தம்முடைய தேசியமய மசோதாவிற்கு இந்தியப் பேரரசின் உடன்பாட்டை மைசூர் அரசாங்கம் கோரியது. அந்நிலையில், கால் என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, தரப்படவேண்டிய நஷ்டஈடு குறித்து ஆராயத் தொடங்கியது.

" கால் குழுவிடம் தங்களுடைய குறைந்தபட்சக் கோரிக்கையாக ரூ. 4 கோடி நஷ்டஈடு தங்கச் சுரங்க நிறுவனங்கள் கோரின. தமக்குக் கிடைத்த முழு விவரங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, கால் குழு, நஷ்டஈட்டுத் தொகையை ரூ. 119 இலட்சமாக நிர்ணயித்தது. ஆனால் தொழில் நிறுவனங்களோ, கிடைக்கக்கூடிய தங்கத்தின் மதிப்பும், இயந்திர மூலதனத்தின் மதிப்பும் சேர்ந்து ரூ. 170 இலட்சமாகிறது என்று கூறின. இதற்குக் குறைவாகத் தரப்படும் தொகை, பறிமுதல் கோட்பாடு கொண்டதேயாகும் எனவும் குறிப்பிட்டன.

" இறுதியாக இந்தியப் பேரரசு நஷ்டஈட்டுத் தொகையாக ரூ. 164 இலட்சம் கொடுக்கும்படி மைசூர் அரசாங்கத்தைக் கோரியது. இத்தொகையைக் கொடுப்பதில் மைசூர் அரசாங்கத்திற்கு மனப்பூர்வமாக எண்ணமில்லை. வேறு மாற்று முறை இல்லாததினாலேயே இத்தொகைக்கு மைசூர் அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

" இந்த நஷ்டஈட்டுத் தொகை விஷயத்தில் மைசூர் அரசாங்கம் கொடுக்க விரும்பும் ரூ. 87·8 இலட்சத்திற்கும், தாம் குறிப்பிடும் ரூ. 164 இலட்சத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகையை, மைசூருக்குக் கடன் கொடுத்து உதவுவதாகச் சொல்ல வேண்டிய எல்லைக்கு இந்தியப் பேரரசு சென்றது."

வடநாட்டு இந்தி வெறியரின் மனப்போக்கு

மக்கள்சபை சம்பவங்கள் தரும் சான்று

வடவரின் மனப்போக்கு எப்படிப்பட்டது? இந்தி வெறியர்கள் இதர மொழி மக்களை—குறிப்பாகத் திராவிட மொழி பேசும் மக்களை எப்படிக் கருதுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள மக்கள் சபையில் நடைபெற்ற கடந்த காலச் சம்பவங்கள் சில துணை புரிகின்றன.

அண்மையில் நடைபெற்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின்போது, மக்கள் சபையில் பேசிய ஒரு வடநாட்டு உறுப்பினர் 80 நிமிட நேரம், இந்தியைப் பரப்பவேண்டுவதின் அவசியம் குறித்துப் பேசியிருக்கிறார்.

அரசியல் சட்டம், சர்வ தேச எண்களைத்தான் இந்தியா தனது அரசாங்க அலுவல்களுக்குக் கொள்ளவேண்டும் என்று விதித்திருப்பதைக் கண்டித்து அவர்பேசினாராம்! மேலும், இந்தி எண்களே இந்திய சர்க்காரால் உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினாராம்! அப்படிச் செய்யாதிருப்பது இந்தியை இழிவுபடுத்துவதாகும் என்று நொந்து கொண்டாராம்!

இந்தி கிஞ்சிற்றும் தெரியாத மந்திரியை நோக்கிப் பேசும்போது சில வடநாட்டு உறுப்பினர்கள், தங்களுக்குச் சரியாக இந்தி தெரியாவிட்டாலும் கொச்சை இந்தியிலேனும கட்டாயமாக இந்தியே பேச வேண்டும் என்னும் நோக்குடனும் பேசி வருகின்றனராம்!

ஒரு மந்திரி, ஒரு உறுப்பினரை, 'தயவு செய்து ஆங்கிலத்தில் பேசுங்கள்' என்று கேட்டபோது, 'முடியாது, முடியாது; இந்தி—இந்தி—இந்தியில் மட்டுமே பேசுவேன்' என்று திமிரோடு கூறினாராம், அந்த உறுப்பினர்!

'இந்தி எவர் மீதும் திணிக்கப் படமாட்டாது' என்று வடநாட்டுத் தலைவர்கள் திரும்பத் திரும்ப அளித்துள்ள 'உறுதி மொழி'களைக் கேலப்படுத்தும் வகையில், காலமான மாவலங்கர் ஒருமுறை மக்கள்சபையில், 'இந்தி கற்றுக்கொள்ளாதவர்கள் அரசியல் சட்டத்தை மதிக்காத குற்றத்திற்கு ஆளாவர்

(4-ம் பக்கம் பார்க்க)

கோவை, திருச்சி மாவட்டங்களில் தேர்தல் ஆய்வுக்குழு

பல நூறு பிரதிநிதிகள் நிலைகளை எடுத்துரைத்தனர்

செல்லுமிடமெல்லாம் மக்கள் காட்டும் ஆர்வம்

போகிற இடங்களில் எல்லாம் பொதுமக்களின் பேராதரவையும், கழகத் தோழர்களின் ஆர்வத்தையும் தேர்தல் ஆய்வுக் குழுவினர் கண்டு வருகின்றனர்.

தேர்தல் ஆய்வுக் குழுவினரிடத்தில், கழகத் தோழர்கள்—அனுதாபிகள் மட்டுமின்றி, ஆங்காங்கே உள்ள நடுநிலையாளர்களும் அரசியல் ஆர்வம் கொண்டவர்களும் குழுவினரைச் சந்தித்துப் பிரதேச நிலைமைகளையும், கழகத்திற்கு ஆங்காங்கே உள்ள செல்வாக்கினையும் எடுத்துக்கூறி வருகின்றனர்.

குழுவினரின் 14, 15-ம் நாளையப் பணிகள்பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன:—

ஈரோடில்:

சேலத்திலிருந்து 14ம் தேதி மாலை புறப்பட்ட ஆய்வுக் குழுவினர், ஈரோட்டிற்கு இரவு 8 மணியளவில் வந்து சேர்ந்தனர்.

மாலை முதலே ஈரோடு நகரில் பெரும் பரபரப்புக் காணப்பட்டது; தேர்தல் ஆய்வுக் குழுவினரின் வருகையை ஒட்டி, கோவை மாவட்டத்தின் 7 தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 200-க்கும் அதிகமான பிரதிநிதிகள், ஈரோடு நகருக்கு மாலையே வந்து சேர்ந்திருந்தனர்.

இரவு ஒன்பது மணியளவில், வேங்கட நாயக்கன் சத்திரத்தில் குழுவினர், வந்திருந்த பிரதிநிதிகளுடன் உரையாடினர்.

பிரதிநிதிகளிடமிருந்து குழுவினர் எதை எல்லாம் தெரிந்து கொள்ள விழைகின்றனர் என்ற கருத்தினைப் பொதுச் செயலாளர் விளக்கினர்.

பின்னர், தனித்தனியாகவும், பல பிரிவினராகவும் பிரதிநிதிகள் குழுவினரைச் சந்தித்துத் தகவல்கள் அளித்தனர்.

இரவு ஒரு மணிக்குக் குழுவினர் இந்தப் பணிகளை முடித்துக்கொண்டனர்.

ஈரோட்டிலிருந்து 15-10-56 அன்று காலை தேர்தல் குழுவினர் புறப்பட்டனர். தோழர் எஸ். அப்பாவு, மற்றும் நகர தி. மு. கழகச் செயலாளர் உள்ளிட்ட தோழர்கள் குழுவினரை வழியனுப்பி வைத்தனர்.

கோவையில்:

ஈரோட்டிலிருந்து தேர்தல் குழுவினர் காலை 11 மணியளவில் கோவை நகர் வந்தடைந்தனர். மற்றெல்லா இடங்களையும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 17-10-'56 புதன்

இது என்ன திட்டம்?

இந்தியத் துணைக் கண்டத்தில், நாடாளும் திறம்பெற்றிருப்பவர்கள் தங்களைத் தவிர்த்து வேறு எவரும் கிடையாது என்பது காங்கிரசுக் கட்சியினரின் எண்ணம். இது, தப்புக் கணக்கு மட்டும் அல்ல; வடிகட்டின ஆணவமும் ஆகும்.

காங்கிரசுக் கட்சியில் இருந்துவரும் இரண்டாந்தர மூன்றாந்தரத் தலைவர்கள் மட்டுந்தான் இத்தகைய ஆணவம் கொண்டிருக்கின்றனர் என்பதில்லை. இந்த அகந்தையின் சிகரமாக இந்தியப் பிரதமர் நேருவே இருந்து வருகிறார்.

ஆளும் திறமை தங்களுக்கு மட்டுமே உண்டு எனக் கருதிக் கொண்டிருப்பதுடனும் காங்கிரசுக் கட்சியினர் இருந்துவிடவில்லை. நாடாளும் உரிமை தங்களுக்கு மட்டுமே உரித்தானது, மற்றவர்களுக்குக் கிடையாது என்ற நினைப்பின் பிறப்பிடமாகவும் காங்கிரசுத் தலைவர்கள் இருந்து வருகின்றனர்.

நாடாளும் திறமை, தகுதி தங்களுக்கு மட்டுமே உண்டு எனத் திடமாக நம்பிக்கொண்டிருப்பதுடன், நாட்டு மக்களின் நல்வாழ்வின் தேவைகளை நன்கு உணர்ந்திருப்பதிலும், அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கானச் சிறந்த திட்டங்களை உருவாக்குவதிலும், அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலும் தங்களுக்குள்ள அறிவுபோல் வேறு எவருக்கும் இருக்கவில்லை என்றும் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள், தங்களைக் குறித்து உயர்வாகவும் மதிப்பிட்டுக்கொண்டுள்ளனர்.

இத்தகைய ஆணவத் தன்மைகளை அவர்கள், தங்கள் மனச் சிறைக்குள் மறைத்து வைத்திருக்கவுமில்லை. இதனை மக்கள் அனைவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையில், மன்றமேறி மார்தட்டி வெளிப்படையாகக் கூறியும் வருகின்றனர்.

அவர்களிடம் இருப்பதாக அவர்களாலேயே பெருமையாகப் பீத்திக் கொள்ளப்பட்டு வரும் தன்மைகள் சிறிதளவும் அவர்களிடம் இல்லை என்பதை, தனித்து அவர்களாலேயே போடப்படும் திட்டங்களும், அவைகளை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் செயல் முறைகளும் எடுத்துக்காட்டி வருகின்றன. அவர்களுடைய பேச்சு வெறும் பகட்டு—வீண் டம்பம் என அவர்களுடைய செயல் விளக்கமாக்கிவிட்ட பின்னருங்கூட, மற்றவர்களைக் குறித்துத் தவருக நினைத்துக் கொண்டிருப்பதையும், அதே நேரத்தில் தங்களைப்பற்றி மிகையாகக் கற்பனை செய்து கொண்டிருப்பதையும் மாற்றிக் கொள்ள அவர்கள் ஒப்புவதில்லை. அவ்வாறு தவறு கண்டு திருத்திக்கொள்ளுவதை காங்கிரசுத் தலைவர்கள், தங்கள் பெருமைக்கு இழுக்கு என்றுங்கூட எண்ணி இருக்கின்றனர்.

நாடாளும் திறமை, உரிமை, திட்டம் தீட்டும் பேரறிவு, அதைச் செயல்படுத்தும் ஆற்றல் ஆக அனைத்தும் தங்கள் கட்சியின் தனி உடைமை என்ற நினைப்புதான், தங்கள் ஆட்சிக்கு மேலும் ஒரு முப்பதாண்டுக் காலக் குத்தகை வேண்டும் என இந்தியப் பிரதமர் நேருவை பேசவைத்திருக்கிறது. அதே நினைப்பின் எதிரொலிதான் 'நாடகமாடிகள் நாடாளுவதா?' என முதலமைச்சர் காமராசரும், 'திட்டம் தர முடியுமா?' என நிதி அமைச்சர் சுப்பிரமணியமும் கேட்பதாகும்.

இவை அனைத்தும், மக்களைக் குறித்து இழிவாகவும், தங்களைக் குறித்து மிகையாகவும் காங்கிரசுத் தலைவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதின் சிறு கூறுகளாகும். நிற்க,

மக்களின் தேவைகளையும், அவைகளை ஆக்கித் தருவதற்குரிய ஏற்பாடுகளை இயற்றுவதிலும், அவைகளைச் செயலாற்றுவதிலும்காங்கிரஸ் ஆளவந்தார்கள் எத்தகைய அறிவும் ஆற்றலும் பெற்றிருக்கின்றனர் என்பதற்கு ஒரே ஒரு சான்று மட்டும் போதுமானதாகும்.

இந்தியப் பேரரசின் நேரடி கண்காணிப்பில் தேசிய ஆய்வுக் குழு என்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்பு அமைப்பு செயல்பட்டு வருகிறது. அவ்வாய்வு நிலையம், சூரிய வெப்பத்தைக் கொண்டு தொழில்படும் ஒரு அடுப்பு வகையைக் கண்டு பிடித்தது. அவ்வடுப்பின் மூலம் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி, உணவுப் பொருட்களைச் சமைக்கவும், தண்ணீரைச் சூடாக்கவும் முடியுமென, அப்புதிய கண்டுபிடிப்புபற்றிக் கூறப்பட்டது. அதுவுமன்றி, உணவுப்பொருட்களை வேகவைக்கும் வகையில் செலவழிக்கப்பட்டுவரும் நிலக்கரியும் எரிபொருளும் மீதமாகும் எனவும், அப்புதிய சூரிய வெப்ப அடுப்பு குறித்து, இந்தியப் பேரரசின் அமைச்சர் ஏற்கனவே பீத்திக்கொண்டார். அத்துடன், 'உலகத்தையே பரபரப்படையச் செய்துவிட்ட தேசிய ஆய்வு நிலையத்தின் புதிய கண்டுபிடிப்பு' என இந்தச் சூரிய அடுப்பைப் பாராட்டி, நான்காண்டுகளுக்குமுன்பே, அந்த நிலையத்தின் தலைமை அலுவலர் ஒப்பாரி வைத்திருந்தார்.

ஆனால், இவ்வளவு பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டு வந்த சூரிய வெப்ப அடுப்பு முழுத் தோல்வி பெற்றுவிட்டது என்றும், மேலும் அதுபற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும் முயற்சி அறவே கைவிடப்பட்டது என்றும், இந்தியப் பேரரசு இப்பொழுது முடிவாக அறிவித்துவிட்டது.

சூரிய வெப்ப அடுப்பு நிலையற்றத் தொழில்—பயனற்றது என, இப்பொழுது அரசாங்கம் முடிவாகக் கூற முன்வந்து இருக்கிறது.

; பயனற்றதும், சிக்கனச் செலவில்லாததுமான இப்புதிய அடுப்பைக் கண்டு பிடித்த பொழுதே; தேசிய ஆய்வு நிலையம் அறிந்துகொண்டு இருக்க வேண்டும். சூரிய வெப்பத்தை நேரடியாகப் பயன்படுத்துவது என்பது எல்லா நேரத்திலும், எல்லாக் காலத்திலும், எல்லா நாடுகளிலும் முடியாத ஒன்றாகும் என்ற உண்மையைத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ள ஒருவருக்குச் சராசரி அறிவு இருப்பதே போதுமானதாகும்.

"சூரிய அடுப்பைக் காண டெல்லி தேசீய பௌதீக ஆய்வுக்கூடத்திற்குச் சென்றிருந்தேன். கண்டுபிடிப்பு எனக் கூறிக்கொள்ளப்படும் இதில் எவ்வித நுண்ணிய புதுமையையும் நான் காணவில்லை. அதற்குத் தரப்பட்டுள்ள விளம்பர அளவிற்கு அது தகுதியற்றது என்பதையும் உணர்ந்தேன்.

"மக்கள் உவக்கும் வகையில் அதனிடம் எத்தகைய தனிச் சிறப்பும் இல்லை. அது, அதிகமான இடத்தை அடைத்துக்கொண்டு இருக்கிறது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதை எளிதில் நகர்த்த முடியாது. மிகுதியான சூரிய ஒளியில்தான் அதைப் பயன்படுத்த முடியும். யார்தான் கொடிய வெய்யிலில் நின்றுகொண்டு சமைக்க ஒப்புவார் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவ்வடுப்பு குறித்து அறிவிப்பதற்குமுன்னரே, இந்தச் சங்கடங்களை எல்லாம் கண்டுபிடிப்பாளர்கள் கருதி இருக்க வேண்டும்."

புதிய சூரிய வெப்ப அடுப்பு குறித்து, மேற்குறிப்பிட்ட உண்மைகளை பம்பாய் வாசி ஒருவர் 'டைம்ஸ்' ஆங்கில இதழில் வெளிப்படுத்தியுள்ளார்.

"இத்தகைய அற்பமான ஏற்பாடுகளுக்கு பணத்தை விழுங்கும் பயனற்றச் செலவில், இந்தியப் பேரரசு இனியாவது ஈடுபடாதிருக்க வேண்டும்."

இப்படியும், இந்தியப் பேரரசிற்கு இடித்துரைத்திருக்கிறார் அந்தக் குடிமகன்.

பயனற்ற சூரிய அடுப்பிற்காகப் பல இலட்ச ரூபாய்களை—மக்கள் வரிப் பணத்தைப் பாழாக்கி இருக்கிறது இந்தியப் பேரரசு!

இந்த அலங்கோலத்தில் நாடாண்டுக் கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர்தான், நம்மைப் பார்த்து நையாண்டி செய்கின்றனர்—நாவடக்கமில்லாது துடுக்குத்தனமாகத் தூற்றியும் வருகின்றனர்.

குடும்பக் கலைக் கல்லூரி

கோவையில் நிறுவப்படும்

கோவை, அக். 15—

அடுத்த கல்வி ஆண்டில் இங்கு குடும்பக் கலைக் கல்லூரி ஆரம்பமாகிவிடும் என்றும், இதற்கென ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், தெரிய வருகிறது.

இந்தக் கல்லூரியில், முதல் ஆண்டில் 25 மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுமாம்.

இந்தக் கல்லூரிதான் தென்னாட்டிலேயே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டுள்ள முதல் குடும்பக் கலைக் கல்லூரியாகும்.

66 துணி ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்

ஆமதாபாத், அக். 14—

நகரில் உள்ள 66 துணி ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளருக்கு இந்த ஆண்டில் அதிகப்பட்சம் 3 மாத போனசும், குறைந்தபட்சம் அரை மாதப் போனசுமாக மொத்தம் ரூ. 1,20,00,000-த்திற்கும் அதிகமாகப் போனஸ் வழங்கப்படும் என்று தெரிகிறது.

புதிய மாநில முதன் மந்திரி பதவி

கோபால — சஞ்சீவி ரெட்டிகள் மோதுதல்

ஆந்திராவில் காங்கிரஸ் கோஷ்டிகள் தீவிரம்

கர்னூல், அக். 15—

ஆந்திர பிரதேச மாநிலத்தின் சட்டசபைத் தலைவர் பதவிக்குத் தான் போட்டியிடப்போவதை உறுதி செய்து, முதன் மந்திரி கோபால ரெட்டி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

"மேலிடம், நான் போட்டியிட வேண்டாமெனக் கூறியதாகவும், அதையொட்டி நானும் போட்டியிடப் போவதில்லை என்றும் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தவறானது; நான் போட்டியிடாமல் இருக்கப்போவதில்லை; போட்டியிடப் போகிறேன்" என்று கோபாலரெட்டியாரின் அறிக்கை கூறுகிறது.

வெற்றி யாருக்கு?

தெலிங்கான பிரதேசத்திலிருந்துவரும் 50 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களில் சுமார் 35 பேர்களவரை சஞ்சீவி ரெட்டியையே ஆதரிப்பார்கள் என்றும், அதனால் மொத்தம் உள்ள 146 காங்கிரஸ் உறுப்பினர்களில் 83 பேர் சஞ்சீவி ரெட்டியை ஆதரிப்பர் என்றும் கணக்கிட்டு, சஞ்சீவி ரெட்டிக்கே வெற்றியென்று சிலகாங்கிரசார் பேசிவருகின்றனர்.

சமரச முயற்சி தோல்வி

தெலிங்கான பிரதேச காங்கிரஸ் தலைவரான ரங்கா ரெட்டி, 'தலைவர் பதவிக்குப் போட்டி கூடாது' என்று மேற்கொண்ட சமரச முயற்சி தோல்வியுற்றுவிட்டதாகத் தெரிய வருகிறது.

மறுப்பு

தான், கோபால ரெட்டியை ஆதரிப்பதாக உறுதி மொழி தந்துள்ளதாய் வெளிவந்துள்ளசெய்தி தவறானது என்றும் ரங்கா ரெட்டி மறுத்திருக்கிறார்.

'இந்தச் சூழ்நிலையிலா கேளிக்கை—கூத்து?'

ஆமதாபாத், அக் 13—

"குசராத்தியர்களுக்குத் தனி மாநிலம் இல்லாதபோது, இருமொழி பம்பாய் மாநில அமைப்பு உருவாகும் இந்தச் சூழ்நிலையில், தீபாவளிக் கொண்டாட்டமும், எந்தவிதக் கேளிக்கையும் கூடாது."

என்று, மகாகுசராத் இயக்கம் குசராத்தியர்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளது.

இராசப்பிரமுகரே தொடர்ந்து கவர்னர்!

மைசூர் இராசப்பிரமுகரே, தொடர்ந்து புதிய மைசூர் மாநிலத்தின் கவர்னராக இருப்பார் என்று தெரியவருகிறது.

இது குறித்த குடியரசுத் தலைவரின் அழைப்பை இராசப்பிரமுகர் ஏற்றுக்கொண்டுவிட்டாராம்.

சர்க்கரை ஆலை இயந்திரங்கள் உற்பத்தி செய்யத் திட்டம்

வடநாட்டில் நான்கு தொழிற்சாலைகள்; சென்னையில் ஒன்று துவங்க அனுமதி

புதுடில்லி, அக் 15—

ஆண்டொன்றுக்கு இரண்டு சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை நிறுவ, சென்னை எஞ்சினீயரிங் நிறுவனம் ஒன்றிற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறதாம். 2,400 டன் இயந்திரங்கள் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுமாம்.

இதேபோலத் தொழிற்சாலைகள் நிறுவுவதற்காகக் கல்கத்தா, யமுனா நகர் நிறுவனங்கள் இரண்டு தாக்கல் செய்த திட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்.

இதற்கு முன்பாகவே இரண்டாம் திட்ட காலத்தில் சர்க்கரை ஆலை இயந்திரங்கள் தயாரிப்பதற்கென பம்பாய் நகரிலும், மராட்டியத்தில் வால்சந்த் நகரிலும் இரு தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாம்.

2-ம் உலக யுத்தம்

இன்னும் முடியவில்லை!

மணிலா, அக். 15—

தெற்கு லூசானில் மின்டோரோ மாகாணத்தின் மலைப் பகுதியில் சிக்கிவிட்ட சுமார் 50 ஜப்பான் போர் வீரர்களுக்கு, இன்னும் இரண்டாம் உலக யுத்தம் முடிந்துவிட்டது என்ற சேதி தெரியாது என்றும், அவர்கள் தலைவனான தைகா தேவ் மொராய் என்பார், தாங்கள் சரணடைவதற்கு இரண்டு நிபந்தனைகள் விதித்ததாகவும் கூறப்படுகிறது.

எல்லா யுத்தக் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கவேண்டும்; தங்களை எல்லாம் உடனே ஜப்பானுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்பதே அவர்கள் விதிக்கும் நிபந்தனையாம்.

ரோக் சாஸ் நகர் அருகேதான் இவர்கள் தலைமறைவாய் வாழ்கின்றனராம். இவர்கள், அங்கு வாழ்கிற மங்காயப் பெண்களை மணந்துகொண்டு, மலைப்பிரதேசத்தில் அரிசி விளைவித்துச் சாப்பிடுகின்றனராம்.

இவர்களிடத்தில் பழுதாகிப் போன துப்பாக்கிகள், வெடி மருந்துகள் எல்லாம் இருக்கின்றனவாம்.

இந்தத் தகவலை ரோக் சாஸ் நகரசபைத் தலைவர் அளித்திருக்கிறாராம்.

ஆரணியாறு திட்டம்

பாதிக்கப்படும் குடும்பங்களுக்குக் குடியமைப்பு வசதி

சென்னை, அக் 15—

ஆரணியாறு திட்டத்தால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு வேறு இடத்தில் குடியமைத்தல் போன்ற பிரச்சினைகளை விவாதிப்பதற்காக சென்னை - ஆந்திர அதிகாரிகளின் மாநாடு நடைபெற்றது.

இடம் பெயரும் மக்களுக்கு இலவசமாக இடவசதி அமைத்துத்தர ஆந்திர அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளதாம்.

குடியமைப்பதற்காக அவர்களுக்கு ஏற்படும் செலவை சென்னை அரசாங்கம் ஏற்கும் என்று தெரிகிறது.

காவிரி — கொள்ளிடத்தில் வெள்ள அபாயம்?

அறுவடைப் பயிர் சீரழிவு?

திருச்சி, அக். 14—

காவிரியிலும், கொள்ளிடத்திலும் தண்ணீர் மட்டம் உயர்ந்து வருவதால் வெள்ளம்பற்றிப்பொது மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்யப்படும் நிலைமையிலுள்ள குறுவைப் பயிர் இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்படுமென அஞ்சப்படுகிறது.

சங்கரலிங்கம் மறைவுக்குத் தேர்தல் ஆய்வுக் குழு அனுதாபம்

விருதுநகர் சங்கரலிங்கம் அவர்களின் மறைவுக்கு மிகவும் வருந்தியும், அவரது குடும்பத்தாருக்குத் தங்களின் அனுதாபத்தைத் தெரிவிக்குமாறும், தேர்தல் ஆய்வுக் குழுவினரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன் ஆகியோர் தந்திமூலம் விருதுநகர் தி. மு. கழகச் செயலாளருக்கு செய்தி அனுப்பியுள்ளனர்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் அனுதாபம்

சென்னையில், சங்கரலிங்கனுருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சுமார் 1,000 பேர் இன்னன்று வகுப்புகளுக்குச் செல்லாமல், நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வந்து, திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டம் நடத்தியிருக்கின்றனர்; பல மாணவத் தோழர்கள் பேசியிருக்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியை தி. மு. க. மாணவர் கிளைத் தோழரும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றச் செயலாளருமான தோழர் நடராசன் முன்னின்று நடத்தியிருக்கிறார்.

முன்னுள் இரவு, கல்லூரி விடுதியில் உள்ள மாணவர்கள் 79 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்தும், இரவு உணவு உட்கொள்ளாமலும் இருந்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

தொழிலாளர் அனுதாபம்

சென்னை, அக். 15—

தண்டையார்பேட்டையிலுள்ள மைசூர் பிரிமியர் மெடல் பாக்டரி அண்டு இந்துஸ்தான் ரோலிங் மில் கம்பெனிகளில் வேலை செய்யும் குமாஸ்தாக்கள், சூபர்வைசர்கள், தொழிலாளர்கள் அனைவருமாக—600-க்கு மேற்பட்டவர்கள் இன்று காலையிலிருந்து இந்நாள் பூராவும் துக்கம் தெரிவிக்க வேண்டி வேலையை நிறுத்தி அமைதியாகக் கலைந்தனர்.

காலையில் கூடிய கூட்டத்தில் சங்கரலிங்கம் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிப்பதென்றும், அன்றியும் எந்தக் கொள்கைகளுக்காக அவர் உயிர்த் தியாகம் செய்தாரோ அதற்கான போராட்டத்தில் ஈடுபடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

உயரிய இலட்சியத்திற்காகப் போராடிய பழம்பெரும் தேசபக்தரின் உயிரைக் காப்பாற்றாமல் அலட்சியம் செய்த சென்னை—மத்திய சர்க்கார் போக்கைக் கண்டு, தொழிலாளர்கள் மிகுந்த அதிருப்தியும், ஆத்திரமும் அடைந்துள்ளனர்.

திருநெல்வேலியில் :

சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் திருநெல்வேலியில், 15-ந் தேதியன்று அர்த்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

மாணவர்கள் பலர் வேலை நிறுத்தம் செய்து, ஊர்வலம் நடத்தித் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர்.

சேலத்திலும் :

சேலத்திலும் இரண்டொரு ஆலைகள் மூடப்பட்டன; கோட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஆசிரமத் தொழிலாளர் உண்ணு நோன்பு

தி. மு. கழக செயலாளர் சந்திப்பு

புதுவை, அக். 16—

புதுவை அரவிந்த ஆசிரமத்தின் எதிரில், அவ்வாசிரமத் தொழிலாளர் அறுவர் உண்ணு நோன்பை மேற்கொண்டுவருகின்றனர். அவர்களுள் இருவர் நிலை மோசமாகவே 13—10—56 காலை அவர்களைச் சர்க்கார் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். மற்ற நால்வரையும், அன்று இரவு 7 மணியளவில், புதுவை தி. மு. கழகச் செயலாளர் தோழர்ச. சிவப்பிரகாசம் அவர்களும், மற்றும் கழகத் தோழர்கள் சிலருமாகச் சென்று சந்தித்துப் பேசினர்.

பிறகு செயலாளர் அவர்கள், உண்ணு நோன்பு கண்டு ஆசிரமத்தார் உள்ளம் இரங்காதென்றும், சட்டப்படி கோர்ட்டில் வழக்காடுவதன் மூலம் கோரிக்கை நிறைவேறுவதோடு அவர்கள் ஆணவப் போக்கையும் அடக்க முடியுமென்றும், இவ்வழி மேற்கொண்டால் வழக்கை இலவசமாகப்பேச கழகத் தோழரான வழக்கறிஞர் சு. பெருமாள் அவர்களை ஏற்பாடு செய்து ஒத்துழைப்பதாகவும் கூறி, உண்ணு நோன்பைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு உண்ணு நோன்பாளர்கள் நன்றி தெரிவித்து, கமிட்டியினரைக் கலந்து நாளை மாலை பதில் அனுப்பிவைப்பதாகக் கூறிய பின், தோழர்கள் விடை பெற்றுத் திரும்பினர்.

அன்று காலை வழக்கறிஞர் சு. பெருமாள் அவர்களும் உண்ணு நோன்பாளர்களைக் கண்டு பேசியுள்ளார். (ந—கி.)

தோழர் வ. இராமனுதன்

சைக்கிளிலிருந்து விழுந்ததால் வலது கால் எலும்பு முறிந்தது

திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. கழகச் செயலாளரும் முத்துப்பேட்டை கிளையின் செயலாளரும், பஞ்சாயத்துப் போர்டு உறுப்பினருமான தோழர் வ. இராமனுதன் அவர்கள் 10—10—56ல் சைக்கிளிலிருந்து கீழே விழுந்ததன் காரணமாக வலது கால் தொடை எலும்பு முறிந்துபோனதுடன் முகத்திலும் காயம்பட்டிருக்கிறது அவர் தஞ்சாவூர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறார். மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ நேற்று தஞ்சாவூர் மருத்துவமனையில் அவருடன் கூட இருந்து சிகிச்சையளிக்க ஏற்பாடுகள் செய்தார். டாக்டர் சுப்பையன் அவர்கள் மேற்பார்வையில் சிகிச்சை நடைபெறுகிறது. (ந. கி.)

டில்லி சர்க்கார் ஊழியர்களுக்கு

பிரயாணச் சலுகை

புதுடில்லி, அக். 15—

'ஊழியர்கள்—250 மைல்களுக்கப்பால் வசிப்பவர்களானால், அவர்களுக்குப் பிரயாணச் சலுகை தரப்படும்', என்று டில்லி சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

ஒரு ஆண்டு, இலாகாவில் பணியாற்றிவிட்ட பிறகுதான் இந்தச் சலுகை கிடைக்கும்.

அதுவும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தச் சலுகை, விடுமுறையில் வீட்டிற்குப்போய் வருவதற்காகத் தரப்படுமாம். குறைந்தது 14 நாட்கள் விடுமுறையில் செல்வோருக்கு மட்டுமே இந்தச்சலுகை தரப்படுமாம்.

இது எல்லா டில்லி சர்க்கார் ஊழியர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் கிடைக்குமாம்

சென்னை சிம்சன் குருப் கம்பெனித் தொழிலாளர்

தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம்

12-10-56ல், சென்னை 29-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் வி. எஸ். நடராசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கம்பெனித் தொழிலாளர் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டத்தில், தோழர்கள் எம். ஏ. கரிகாலன், வி. எஸ். நடராசன் ஆகியோர் தேர்தல் நிதிக் குழுச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மற்ற ஒவ்வொரு குருப் கம்பெனிகளும் தங்களுக்குள் ஒரு குழு அமைத்து நிதி வசூலிக்க வேண்டும் என்றும், அப்படி அமைக்கும் குழுவில் 21—10—56 காலை 9 மணிக்கு 29-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் (31, வாலர்ஸ் ரோட், சிந்தாதிரிப் பேட்டை) கூடுகின்ற கூட்டத்திற்கு இரண்டிரண்டு பிரதிநிதிகள் அனுப்பி தலைமைச் செயற்குழு அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை பி. & சி. ஆலை தி.மு.க. தோழர்கட்கு :

"23—9—56ல் நடைபெற்ற தி. மு. க. தேர்தல் நிதிக் குழுக் கூட்டத்தில் ரூ. 230-ம், 14—10—56ல் நடைபெற்றக் கூட்டத்தில் ரூ. 170-ம் ஆக, மொத்தம் ரூ. 400 வசூலாகியிருக்கிறது. நம் ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் தி. மு. க. தேர்தல் நிதிக்குப் பெருந்தொகை தர வேண்டியிருப்பதால் தோழர்கள் மேலும் நிதி வசூல் செய்து வருகின்றனர். இதுவரை நிதி தராத தொழிலாளர்கள் தங்கள் பங்கினைச் செலுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

"தேர்தல் நிதி நன்கொடை அளிக்க விரும்பும் ஆலைத் தோழர்கள், 'கே. சுப்பிரமணி, எண். 30; குட்டி தம்பிரான் தெரு, புளியந்தோப்பு' என்ற முகவரிக்கு வந்து நன்கொடை இரசீதுப் புத்தகங்களை வாங்கிச் செல்லவும்,"

என்று பி. அண்டு சி ஆலைத் தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழுச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி கேட்டுக் கொள்கிறார்.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு பம்பாய் கழகத் தோழர்கள் தீவிர முயற்சி

பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுக் கூட்டம் 7—10—56 இரவு 7-30 மணியளவில், தாராவி 'திராவிடரகத்'தில் தோழர் எஸ் தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிளைச் செயலாளர்களும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். முன் கூட்ட நிகழ்ச்சி கடிதப் போக்கு-வரத்துகளை தோழர் சு. தங்கவேலன் வாசித்தார். புதிதாக அமைக்கப்பட்டுள்ள கம்பாலாஹில் கிளை மத்தியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

தாயகத்தில் தி மு கழகத் தலைமை நிலையம் திரட்டவிருக்கும் தேர்தல் நிதிக்குப் பம்பாயிலிருந்தும் இயன்ற அளவு நன்கொடை திரட்டி அனுப்ப வேண்டியதின் அவசியம் குறித்துத் தோழர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டு, தேர்தல் நிதிக்குப் பம்பாய்க் கிளைகளில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு கிளை உறுப்பினர்களும் தங்களின் ஒரு நாளைய ஊதியத்தை (அடிப்படைச் சம்பளம்—படி உள்பட) நிதியாகத் தந்துதவ வேண்டுமென்றும், கிளைகள் எல்லாம் தேர்தல் நிதி திரட்டத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாதுங்கா கிளையினர் தங்கள் கிளை உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கவிருக்கும் ஒருநாள் ஊதியம் நீங்கலாகக் கழக நிதியிலிருந்தும் ரூ. 100 தனியாக அளிப்பதாக மாதுங்கா கிளைச் செயலாளர் தோழர் இ. எஸ். எஸ். பிச்சையா கூறியதை, அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

உடனடியாகக் கிளைகளைத்தும் பொது உறுப்பினர் கூட்டம் கூட்டி. உறுப்பினர்கட்குத் தீர்மானம் குறித்து விளக்கி, வசூலில் ஈடுபடவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நவம்பர் திங்களில் பம்பாய்—ஆமதாபாத் ஆகிய இடங்களில் சுற்றுப்பயணம் நிகழ்த்த அழைக்கப்பட்டுள்ள துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களைக் கொண்ட கூட்டத்திற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என மத்தியக் குழுச் செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இறுதியில், படுகொலைக்காளாக்கப்பட்ட நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவிற்கு இறுதி வணக்கம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்று மரியாதை தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

ரூ. 3கோடி செலவில் காப்பி அபிவிருத்தித் திட்டம்

கோவை, அக் 13—

இந்திய காப்பித் தொழிலைப் பரவலாக்கி முன்னேற்றமடையச் செய்வதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டுள்ளது.

இந்தத்தொகையிலிருந்து தோட்டக்காரர்களுக்கும் கடன் தரப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1961-ல் 60,000 டன் காப்பிக் கொட்டை உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

25 பேர்களுக்குத்தான் !

புதுடில்லி, அக். 13—

மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நாட்டில் ஏழு எஞ்சினீரியங் கல்லூரிகளில் சுரங்க இயல் கல்வி கற்பிக்கப்படுமாம்.

சென்னை கிண்டியில் உள்ள கல்லூரியில் 25 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

வேண்டுகோள்

"நமது மாநிலத்திலுள்ள நகரங்கள், கிராமங்களிலுள்ள பெரியோர்கள் (பொதுமக்கள் சார்பில் என். ஜி. ஓ., ஆதரவாளர்கள்) ஆங்காங்கு கட்சிச் சார்பற்றக் கமிட்டிகள் அமைத்து விவரம் எழுதவேண்டுகிறேன். பின்னர் மாநில மாநாடுகூட்டி என். ஜி. ஓ, சகோதரர்களுக்குத் தக்க நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கத் தேவைப்படுகிறது இது பற்றி உடன் எழுதக் கேட்டுக்கொள்கிறேன்" என்று, சென்னை மாநில என். ஜி. ஓ, ஆதரவாளர் கமிட்டிச் செயலாளரான முத்துப்பேட்டை தோழர் என். சிவசங்கரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஞ்சீபுரத்தில் தோழர் மு. கருணாநிதி

காஞ்சீபுரம் திராவிட மறுமலர்ச்சிக் கழகத்தின் (தி. மு. கழகக்கிளை) சார்பில் இரங்கசாமி குளத்தருகில் 7—10—56 மாலை 6-மணிக்கு, தோழர் மா. நாராயணசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் மு. கருணாநிதி, காஞ்சி-கல்யாணசுந்தரம், டி. வி. நாராயணசாமி, எஸ். முருகேசன் இரா. வெங்கடேசன் ஆகியோர், ஆட்சியாளரின் அவல நிலையை எடுத்துக்கூறியும், கழகக் கொள்கைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

பெருமழையையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்து கூட்டத்தைச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களுக்கு பென்ஷன் வசதி

மங்களூர், அக். 13—

"பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் ஓய்வு கால உபகாரச் சம்பள (பென்ஷன்) வசதி செய்துதரப்படுவது சாத்தியமே,"

என்று, மந்திரி சுப்பிரமணியம் இங்கு, கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டாராம்.

பிரிட்டனில் அடுத்த சர்க்கார்

சென்னை, அக். 15—

"பிரிட்டனில் அடுத்த பொதுத் தேர்தலின்போது தொழிற்கட்சிதான் ஆட்சிக்குவரும்' என்று, சென்னைக்கு வந்துள்ள முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

எரி மலையிலிருந்து மின்சார சக்தி

சோவியத் ரஷ்யா திட்டம்

தற்போது மாஸ்கோவில் எரிமலையின் கீழிருந்து கிடைக்கும் கொதி நீர், குளிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறதாம்!

எரிமலையின் கீழ்ப் பகுதியில் குமுறிக் கிடக்கும் கொடிய வெப்பம் வாய்ந்த நீராவியைக் குழாய் மூலமாகக்கொண்டு வந்து மின்சார சக்தியை உண்டாக்க அடுத்த ஆண்டில், வட கிழக்கு சோவியத் யூனியனைச் சேர்ந்த காஞ்சாட்கா எரிமலையில் பரிசோதனை மின்சார உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தக் குழாய் பூமிக்குக் கீழ் 300 செ.மீ. ஆழத்தில் புதைக்கப்படுமாம்.

தஞ்சையில் மருத்துவக் கல்லூரி அமையாததேன் ?

பண உதவி தருவதற்கு எவரும் முன்வரவில்லையாம் !

தஞ்சை, அக். 15—

'தஞ்சையில் மருத்துவக் கல்லூரி நிறுவும் முயற்சி என்ன ஆயிற்று?' என்று கேட்டதற்கு சென்னை சுகாதார அமைச்சர் ஷெட்டி, பண உதவியளிக்க எவரும் முன்வரவில்லை என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாகக் கட்டப்பட வேண்டிய ஐந்து மருத்துவக் கல்லூரிகளில் ஒன்று தஞ்சையில் அமைக்கப்படக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் மற்றொரு மருத்துவக் கல்லூரி கோவையில் ஏற்படுத்தப்படலாம் என்றும், கோவை நகர மக்கள் அதற்காகப் பண உதவி செய்துள்ளனர் என்றும், அங்குள்ள மருத்துவ மனையையே அபிவிருத்திச் செய்து கல்லூரியாக்கிவிடலாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நோயாளிபோல் நடித்துத்

தங்கம் கடத்தியவர் !

பம்பாய், அக். 15—

கராச்சியிலிருந்து பம்பாய் வந்த 'சர்தனு' என்ற பிரிட்டிஷ் கப்பல் ஒன்றில், ஒரு 'நோயாளி' வந்து இறங்கினார்.

'காயம்பட்ட' முழங்காலில் பெரும் கட்டோடு வந்த அவருக்கு துறைமுக அதிகாரிகள் பலரும் உதவியளித்தனர். சுங்க இலாகா அதிகாரிகள்கூட அவருக்கு மிக அனுதாபம் காட்டினர். ஒரு அதிகாரி, 'நோயாளி'யான அந்தப் பிரயாணியிடம் முழங்கால் காயம் பற்றி மிகக் கவலையோடு விசாரித்துவிட்டு அவரது காலை நகர்த்துவதற்காக முழங்கால் அருகே தொட்டார், அவ்வளவு தான் ; காயமும் இல்லை—பிரயாணி நோயாளியும் இல்லை !— அந்தக் கட்டுக்குள்ளே 42 தோலா தங்கம் இருந்ததாம் !

370 தமிழரசுக் கழகத்தவர் கைது

வடக்கெல்லைக் கிளர்ச்சி நிலை

சென்னை, அக். 17—

கடந்த இரு நாட்களாகத் தமிழரசுக் கழகத்தவர் நடத்திவரும் கிளர்ச்சியில், மொத்தம் மாநிலம் முழுவதுமாக 370 பேர் வரை கைது செய்யப்பட்டிருப்பதாக மாநிலத் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'எல்லைத் தகராறினைத் தீர்ப்பதற்கு ஒரு எல்லைக்குழு நியமிக்கு மாறு டில்லி சர்க்காரை வற்புறுத்துவதற்காக மாநில சர்க்கார் தம்மைக் கண்டு பேசி, ஒரு உடன்பாடான கொள்கையை வகுக்க வேண்டும்' என்றும் ம. பொ. சி. யோசனை கூறியதாகத் தெரியவருகிறது.

மறியல் :

இரண்டாம் நாளான நேற்று காலையில் சுமார் 30 தொண்டர்கள் சென்னைத் தலைமைத் தபால் அலுவலகத்தின் முன் மறியலில் ஈடுபட்டனர் என்றும், அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

தோழர் வானம்பாடி இந்தத் தொண்டர் குழாமிற்குத் தலைமை தாங்கி மறியலில் ஈடுபட்டிருக்கிறார்.

17-ந் தேதியான இன்று விடுமுறையாதலால், சர்க்கார் அலுவலகங்கள், தபால் நிலையங்கள் முன் மறியல் ஏதும் நடைபெறாது என்றும், தொடர்ந்து நாளைய தினம் மறியல் துவங்கப்படும் என்றும் ம. பொ. சி. கூறியிருக்கிறார்.

போலீசார் வழக்கம்போல நகரில் எல்லா பந்தோபஸ்து ஏற்பாடுகளையும் செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

கோவை, திருச்சி மாவட்டங்களில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போலவே, குழுவினர் பணிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'டிராவலர்ஸ் பங்களா'வில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 8 தொகுதிகளிலிருந்து சுமார் 250-க்கும் அதிகமான பிரதிநிதிகள் வந்து சேர்ந்திருந்தனர்.

குழுவினரை, கூடியிருந்த அனைவரும் குதூகலத்தோடு வரவேற்று. எட்டுத் தொகுதிகளைப் பற்றிய விவரங்களைக் குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபடுவது என்ற முடிவுக்குப் பிறகு அந்தந்தத் தொகுதிகளின் அரசியல் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போன்றவற்றையும், கழகங்கள் அப்பகுதிகளில் ஆற்றியுள்ள பணிகள் குறித்தும், தேர்தல் நிலைமைகள் குறித்தும் தோழர்கள் எடுத்துரைத்தனர்.

மாலை 4 மணிக்குக் குழுவினர் அங்கு பணிகளை முடித்துக்கொண்டனர்.

நகரச் செயலாளர் தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம், கோவை செழியன் முதலானோர் குழுவினரை வழியனுப்பி வைத்தனர்.

உடுமலையில் :

கோவையிலிருந்து மாலை புறப்பட்ட ஆய்வுக் குழுவினர் 6 மணியளவில் உடுமலைப்பேட்டைக்கு வந்து சேர்ந்தனர். அங்கு 4 தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 300 பிரதிநிதிகள் கூடியிருந்து குழுவினர் விரும்பிய தகவல்களை அளித்தனர்.

கோவை மாவட்டம் முழுவதிலும் கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவு விளைவித்துள்ள நிலைகளைக் குழுவினர் அறிந்துகொண்டனர். உடுமலை 'பிரயாணிகள் விடுதி'யில் நடைபெற்ற இந்த விசாரணையை இரவு 10 மணியளவில் முடித்துக்கொண்டு குழுவினர், கரூர் நோக்கிப் பயணமாயினர். உடுமலை நகரச் செயலாளர் காளியப்பன், தோழர் ப. நாராயணன் ஆகியோர் குழுவினரை வழியனுப்பி வைத்தனர்.

கரூரில் :

கோவை மாவட்டத்தில் பணிகளை முடித்துக்கொண்ட குழுவினர், கனியூர் வழியாகத் திருச்சி மாவட்ட நிலைகளை அறிவதற்காகக் கரூர் நகரத்திற்கு காலை 9 மணியளவில் வந்து சேர்ந்தனர்.

கரூர் வந்து சேர்ந்த அவர்களை திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர், துணைச்செயலாளர்களான அன்பில் தர்மலிங்கம், பராங்குசம் ஆகியோரும், நகரச் செயலாளரான கரிகாலன் அவர்களும், மற்றும் தோழர்களும் வரவேற்றனர்.

3 தொகுதிகளுக்கான 250 பிரதிநிதிகள் குழுவினரிடம் தங்கள் தங்கள் வட்டார நிலைகளைக் கூட்டாகவும் தனித்தனியாகவும், குழுவினருக்கு எடுத்துரைத்தனர்.

நகரில் உள்ள 'டிராவலர்ஸ் பங்களா'வில் நடைபெற்ற இந்த விசாரணைக் கூட்டம் பகல் $2\frac{1}{2}$-மணியுடன் முடிவுற்றது.

திருச்சியில் :

தேர்தல் குழுவினர் திருச்சி வருகின்ற செய்தி, நகரில் உள்ள பல கட்சியினரிடையேயும் ஒரு பரபரப்பையூட்டியிருந்தது.

நகரசபை சத்திரத்தின் முன்பு நூற்றுக் கணக்கானவர்கள், தேர்தல் ஆய்வுக் குழுவினர் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தனர்.

12 தொகுதிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் குழுவினரைக் காண வந்திருந்தனர்.

கரூரிலிருந்து மாலை 5-30 மணியளவில் திருச்சி வந்த குழுவினர், முனிசிபல் சத்திரத்தில் 6 மணியளவில் விசாரணைப் பணியினைத் துவக்கினர்.

வந்திருந்த பிரதிநிதிகள், குழுவினர் விரும்பிக் கேட்ட எல்லா விபரங்களையும், தொகுதிவாரி நிலைமைகளையும் பல பிரிவினராகவும், தனித்தும் இருந்து எடுத்துரைத்தனர்.

குழுவினர்பால் மக்கள் காட்டிய ஆர்வமும் கழகத் தோழர்களும் பிறரும் காட்டிய உற்சாகமும், மாற்றுக் கட்சியினரின் முகங்களைச் சுருங்க வைத்திருக்கின்றன.

திருச்சியில் இரவு தங்கியிருந்து விட்டு, குழுவினர், இன்று 17-ந் தேதி காலை 8 மணியளவில், மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் முகாமுக்காகப் புறப்பட்டுச் சென்றனர்.

தோழர்கள் அன்பில்தருமலிங்கம், பராங்குசம் முதலிய கழகத் தோழர்கள் குழுவினரை வழியனுப்பி வைத்தனர்.

வடநாட்டு இந்தி வெறியர் மனப்போக்கு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள்' என்று வெறியோடு கூச்சலிட்டாராம்! இந்தியிலேயே திரும்பத் திரும்பக் கேள்வி கேட்டாராம் ஒரு உறுப்பினர்; உடனே, அப்போது மந்திரியாயிருந்த காலஞ்சென்ற கோபாலசாமி அய்யங்கார் தமிழ் மொழியில் பதில் கூறியிருக்கிறார், எரிச்சல் தாள முடியாமல்!

அதேபோல, வேறு ஒரு வடநாட்டு உறுப்பினரின் இந்தி வெறி உச்சம் பெற்றபோது, ஜான் மத்தாய் 'மந்திரி' நிலையிலிருந்து மலையாளத்தில் பதில் கூறியிருக்கிறார்!

அண்மையில், கல்வி மந்திரிகள் மாநாடு ஒன்றில் நேரு பண்டிதர், ஆங்கிலம் நீடிக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியதற்காக உ. பி. இந்தி வெறியர்கள் பகிரங்கமாக நேரு பண்டிதரைக் கண்டித்ததும், உடனே 'நான் ஆங்கிலம் வேண்டும் என்று கூறியதினாலேயே இந்திக்குத் தரப்பட வேண்டிய முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறியதாக அர்த்தமில்லை' என்று விளக்கம் தந்ததும் சீக்கிரத்தில் மறந்துவிடக் கூடியன அல்ல!

★

தேர்தல் நிதி

தேர்தல் ஆய்வுக் குழுவினரைச் சந்திக்க வந்த பிரதிநிதிகளில் கோவை, மற்றும் திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதிநிதிகள், சிறு சிறு தொகைகளைக் கழகத் தேர்தல் நிதிக்கெனத் தந்திருப்பதுடன், மேலும் தங்கள் பங்குக்கு, நிதி திரட்டித் தரத் தயங்கமாட்டோம் என்று உறுதியும் அளித்திருப்பதாகத் தெரியவருகிறது.

கேரளப் பகுதி தி. மு. கழகத் தோழர்கட்கு :

"20—10—56 அன்று திருவனந்தபுரத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், மற்றுமுள்ள தலைவர்கள் முன்னிலையில் தம்பானூர் ஆண்டாள் பில்டிங்கில் (தி. மு. க. அலுவலகம்) நடைபெற இருக்கும் கேரள மாநில தி. மு. கழகக் குழு அமைப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டத்திற்கு, கேரளப் பகுதியிலுள்ள எல்லா தி. மு. கழகக் கிளைகளும் தங்கள் பிரதிநிதிகளை 19-10-56 இரவிலேயே திருவனந்தபுரம் வந்து சேருமாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

என்று, திருவனந்தபுரம் தி. மு. கழகச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில்

திராவிட முன்னேற்றக் கழக

தேர்தல் ஆய்வுக் குழு

"19—10—56 வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணியளவில், தேர்தல் ஆய்வுக் குழுவினரை திருநெல்வேலி-பாளையங்கோட்டையில் திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடியில் சந்தித்து, நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக ஆர்வங்கொண்ட தோழர்கள் தங்கள் தங்கள் தொகுதி பற்றிய நிலவரங்களைச் சமர்ப்பித்துக் கருத்து தரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

'ஆய்வுக் குழுவினரைச் சந்திக்கும் இடமான முருகன் ஐஸ் பாக்டரி, பாளையங்கோட்டை கிரைம் பிராஞ்ச் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகே உள்ளது"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி அறிவிக்கிறார்.

துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

பம்பாய், அக். 16—

நாட்டில் உள்ள எல்லாத் துறைமுகத் தொழிலாளர்களும் நவ. 15-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று இங்கு நடைபெற்ற துறைமுகத் தொழிலாளர் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதிப்பட்டி தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

19—10—56 இரவு 8 மணிக்கு தேனிக்கு அருகில் ஆதிப்பட்டியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சொற்பயிற்சி மன்றச் சிறப்புக் கூட்டம்

21—10—56 மாலை 6 மணிக்கு, விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றச் சிறப்புக் கூட்டம், நாடார் பரிபாலன சங்க (அறிவியல் மன்றம்) கட்டிடத்திற்கு முன், திரு. க. வெள்ளைச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். 'இன்றைய தமிழர் நிலை' என்பது குறித்துத் திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

18—10—56 மாலை 6 மணிக்கு, சென்னை 16-வது வட்ட திருவள்ளுவர் முன்னேற்றக் கழகச் சார்பில், கழகப் பொருளாளர் தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில், தாண்டவராய பிள்ளைத் தெரு, எண் 22 இல்லத்தில் நடைபெறும்; 'பொதுவுடைமை' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர். தோழியர் வனஜா, தனலட்சுமி ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடுவர்.

திருமணம்

19—10—56 மாலை 4 மணிக்கு இராசபாளையம், புதுப்பாளையம் ஆண்டத்தம்மன்கோவில் தெரு, மணமகன் இல்லத்தில் தோழர் சி. த. வேலன்—தோழியர் கா. நாயம்மாள் திருமணம், தோழர் மு. வசவப்பிரதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. பிள்ளையார், ப. க. பாண்டியன், அ. சீனிவாசன், துரை, என். எஸ். நல்லுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

இரங்கூன் (பர்மா)வில்

'நம் நாடு' இதழ்

கிடைக்குமிடம் :

ஆர். எஸ். மணி,
21, சூலே பெகோடா தெரு,
இரங்கூன்—பர்மா

★

கடையநல்லூரில்

'நம் நாடு' இதழ்

கிடைக்குமிடம் :

சி. நடராசன்,
கடலைக்கடை, கடைவீதி,
கடையநல்லூர்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு :

'நம் நாடு' இதழ் அதிகப் பிரதிகள் கேட்டுஎழுதும் ஏஜெண்டுத் தோழர்கள் இதழ் ஒன்றுக்கு ரூ. 2. வீதம் உடன் முன்பணம் அனுப்பினால் தான், கிடைத்தத் தேதியிலிருந்து தேவையான அதிகப் பிரதிகளை அனுப்ப இயலும். முன்பணம் அனுப்பாதத் தோழர்களுக்கு அதிகப்படியான இதழ்களை அனுப்ப இயலாதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—பொறுப்பாளர்

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்.	ஊர்	நேரம்	தங்கும் இடங்கள்
18 :	விருதுநகர்	.... மாலை 6 „	.... முசாபரி பங்களா
19 :	திருநெல்வேலி	.... காலை 9 „	.... பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடி (கிரைம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
„	நாகர்கோவில்	.... மாலை 6 „	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
20 :		ஓய்வு	
21 :	காரைக்குடி	.... மாலை 6 „	.... 'இயூமன் காட்டேஜ்'—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 „	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
„	தஞ்சை	பிற்பகல் 3 „	.... கீழவாசல், கொண்டிராசபாளையத் தண்ணீர்ப் பந்தல் கட்டிடம்
„	மாயவரம்	.... மாலை 6 „	.... முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23 :	கடலூர் N. T.	.... காலை 9 „	.... முசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.